OS: 201/2019

Date:19.04.2023

பெயர் : சாந்தி

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை - பிரதிவாதி தரப்பில்**

இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நிலம் வேண்டும் என வழக்கு போட்டுள்ளேன். இந்த வழக்கு 04.09.2019 தேதி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது தரப்பில் மொத்தம் ஏழு ஆவணங்கள் கொடுத்துள்ளேன். மேற்படி ஏழு ஆவணங்கள் தவிர இவ்வழகக்கு சம்மந்தமாக வேறு ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கில் நான் கொடுத்துள்ள முன்தொகையை கேட்டு வழக்கில் மாற்று பரிகாரம் கேட்கவில்லை. அதற்குரிய முத்திரை கட்டனமும் கட்டவில்லை என்றால் சரிதான். நான் பழைய பதினொன்றாம் வகுப்பு பாடத்திட்டத்தின் படி படித்துள்ளேன் . நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் கிரய ஒப்பந்த பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். இந்த ஆவணத்தின் 1 இலக்கமிட்டவர் சாந்தி என்பவர் நான். 2 இலக்கமிட்ட கவிதா என்பவர் பிரதிவாதி என்றால் சரிதான். கிரய ஒப்பந்தத்தில் 2 இலக்கமிட்டவர் உரிய காலத்திற்குள் கிரயம் செய்து கொடுக்க முன்வரவில்லை என்றால் சிவில் நீதிமன்றத்தில் கிரய பாக்கிதொகையை 1 இலக்கமிட்டவர் கிரய தொகையை டெப்பாசிட் செய்து கிரயம் செய்து கொள்ளவேண்டும் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த 04.09.2019 தேதியிலிருந்து இன்றுவரை பாக்கி கிரய தொகை நீதிமன்ற டெபாசிட்டில் கட்டியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்தில் மேற்படி வாய்தாவிற்குள் 1 இலக்கமிட்டவர் மீதி கிரய தொகையை கட்ட தவறினால் இன்று தேதியில் கட்டிய அட்வான்ஸ தொகையை இழப்பதுடன் இந்த கிரய ஒப்பந்த பத்திரம் சட்டபடி செல்லதக்கது அல்ல என ஆவண வாசகங்கள் உள்ளது என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 உண்மையானதா என்று சொன்னால் உண்மையானதுதான். பத்திரத்தில் உள்ள வாசகங்கள் நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது. மீதி தொகையை செலுத்தினால்தான் கிரயம் செய்து கொடுக்கப்படும் என்று சொன்னால் சரிதான். நான் வா.சா.ஆ.1 கிரய

ஒப்பந்ததில் உள்ளபடி மீதி கிரய தொகையை இதுநாள்வரை செலுத்தவில்லை என்ற ஒரே காரணத்தினாலேயே இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த ஆவணப்படி தாவா சொத்துக்களை கிரயம் செய்து கொள்ள விருப்பமாகவும், தயாராகவும் எப்போது இருந்ததே இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 12.06.2015 தேதியில் எழுதப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள முத்திரை தாள்கள் பெறப்பட்ட தினத்திலேயே எழுதப்பட்டது என்றால் சரிதான். அதே தேதியில் முத்திரை தாள் வாங்கப்பட்டது என்றால் சரிதான். கிரய ஒப்பந்த பத்திரம் எவ்வளவு கால கெடு நிர்ணயிக்கப்பட்டது என்றால் 11 மாதங்கள் நிர்ணயிக்கப்பட்டது. கிரய ஒப்பந்தம் எழுதப்பட்ட தேதியில் இருந்து 11 மாதங்கள் காலகெடுவாக நிர்ணயிக்கப்பட்டது என்றால் சரிதான். மொத்த கிரய தொகை எவ்வளவு என்றால் ரு.3,50,000/- ஆகும். நான் கிரய முன்பனமாக எவ்வளவு முதலில் கொடுக்கபட்டது என்றால்  ரூ.1,00,000/- ஆகும். கிரய ஒப்பந்த பத்திரத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் இரண்டு நபர்கள் போட்டுள்ளார்கள் ஒருவர் நடேசன், மற்றொருவர் செந்தில்குமார். ஒரு பத்திரம் அல்லது கிரய ஆவணம், காலநீட்டிப்பு எழுதப்படும்போது  இரண்டு சாட்சிகள் கையெழுத்திட வேண்டும் என்பது எனக்கு தெரியும். அதேபோல் ஒரு பத்திரம் எழுதப்பட்டால் அது எழுதியவர் பெயர், கையெழுத்து, விலாசம் ஆவணத்தில்  எழுதப்பட வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.  அதன்படி தான் 12.06.2015 தேதியில் எழுதப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தில பத்திரத்தை எழுதியவர் கையெழுத்தும், அவரது முகவரியும் அதேபோல் சாட்சி கையெழுத்திட்ட இரண்டு நபர்களின் கையெழுத்து விலாசங்கள் வாங்கப்பட்டது. வா.சா.ஆ-1 கிரய ஒப்பந்த தேதியான 12.06.2015 தேதியிலிருந்து  11 மாத காலகெடு எப்போது முடிகிறது என்றால் 11.05.2016 தேதியில் முடிகிறது. 12.06.2015 தேதி முதல் 11.05.2016  தேதி வரை எனது தரப்பில் ஒப்பந்த படி ஒப்பந்தத்தினை நிறைவேற்ற விருப்பமாகவும், தயாராகவும் இருந்தேன் என்றும் என்னிடம் போதிய வசதி வாய்ப்புகள் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு இருந்தது என்பதை காட்ட ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது தரப்பு ஒப்பந்தத்தில் உள்ளபடி எப்போதும் அதனை நிறைவேற்றுவதற்கு தயாராகவும், விருப்பமாகவும் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனது வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி கவிதா நான் போட்ட வழக்கிற்கு தாக்கல் செய்துள்ள பதிலுரையில் சொல்லப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பதிலுரையில் பிரதிவாதி வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரத்தில் எழுதப்பட்டுள்ள மேற்குறிப்பில் அவரது கையெழுத்து இல்லை என்றும், அவர் அந்த கையெழுத்தை போடவில்லை என்றும், எந்த மேற்குறிப்பையும் அவரால் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு நான் தாக்கல்செய்வதற்கு முன்பாகவே முதலில் பிரதிவாதிதான் அவரது வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 அறிவிப்புதான் பிரதிவாதி எனக்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். எனது தரப்பு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு விருப்பமாகவும், தயாராகவும் இருப்பதாக முதலில் எந்த அறிவிப்பும் பிரதிவாதிக்கு அனுப்பபடவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 அறிவிப்பில் எனது கிரய முன்பணம் செலவாகிவிட்டது என்றும், ஆகவே மேற்படி கிரய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்து கொடுக்குமாறு அறிவிப்பில் வழக்கறிஞர் மூலம் என்னை கேட்டுக்கொண்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பினை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ-2 அறிவிப்பை படித்து பார்த்து தெரிந்து கொண்டு அதற்கு எனது தரப்பில் நான் ஒரு பதில் அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 அறிவிப்பை பெற்றுக்கொண்ட பின்பு நான் எனது வழக்குரையில் முன்பணத்தை திரும்ப அளிக்குமாறு கேட்டு மாற்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த ஆவணம் காலம் கடந்துவிட்டது என்பதால் நான் இவ்வழக்கில் எவ்வித பரிகாரமும் பெற இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த ஆவணத்தில் மேற்குறிப்பு எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 18.04.2016 தேதியில் எழுதப்பட்டது. மேற்குறிப்பு எழுதும்போது எத்தனை நபர்கள் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் ஒரு நபர் மட்டுமே சாட்சி கையொப்பம் செய்தார். அவர் பெயர் என்ன என்றால் ராஜ்குமார், கொங்கணாபுரத்தை சேர்ந்தவர். கொங்கணாபுரம் என்ற ஊர் எடப்பாடி தாலுக்காவில் வருகிறது என்றால் சரிதான். நான் இருக்கும் ஊர் எது என்றால் காடையாம்பட்டி வட்டம், சந்தை பேட்டையில் இருக்கிறேன். கொங்கணாபுரத்திற்கும், காடையாம்பட்டிக்கும் இடையே சுமார் 50 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். ராஜ்குமார் மேற்குறிப்பு எழுதும் போது யாரால் அழைத்து வரப்பட்டார் என்றால் ராஜ்குமார் எனது வீட்டிற்கு விருந்தினராக வந்தார். ராஜ்குமார் எனக்கு என்ன

உறவுமுறை என்றால் மேற்படி ராஜ்குமார் எங்கள் குடும்ப நண்பர். எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் சுமார் 50 திலிருந்து 100 பேர் அனைவருமே எனக்கு தெரிந்தவர்கள்தான் நண்பர்கள்தான். ஒரு பத்திரத்தில் இரண்டு நபர்கள் சாட்சி கையொப்பம் இடவேண்டும் என்பது எனக்கு தெரியும் மேற்குறிப்பு எழுதும்போது ஒரு நபரிடம் மட்டுமே கையெழுத்து வாங்கியுள்ளேன். மற்றொரு சாட்சியிடம் ஏன் மேற்குறிப்பின்போது சாட்சி கையொப்பம் பெறவில்லை என்றால் அப்போது ராஜ்குமார் மட்டும்தான் இருந்தார். எனது வீட்டிற்கும் பக்கத்து வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அருகருகே தான் வீடுகள் உள்ளது. ஒரு நபரை அழைத்து வர எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 5 நிமிடத்தில் அழைத்து வந்துவிடலாம். ஏன் மற்றொரு சாட்சியிடம் மேற்குறிப்பின்போது கையெழுத்து பெறப்படவில்லை என்றால் அவசரத்தினால் கையெழுத்து பெறவில்லை. பிரதிவாதியால் வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு எனது முன்தொகையை இழந்து விட்டதாகவும் மேற்படி ஒப்பந்தம் செல்லாது என குறிப்பிட்டு அறிவிப்பு அனுப்பிய பிறகே நான் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த ஆவணத்தில் முன் தேதியிட்டு ஒரு மேற்குறிப்பு எழுதியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்குறிப்பில் யார் எழுதியது என கையெழுத்து மற்றும் முகவரி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அழைத்து வந்த நபரால்தான் மேற்படி மேற்குறிப்பு எழுதப்பட்டது. நான் முதலில் ராஜ்குமார் மட்டும் இருந்ததாக சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளேன். தற்போது பிரதிவாதி அழைத்து வந்தவர்தான் மேற்குறிப்பு எழுதினார் என சாட்சியம் அளிக்கிறேன் இதில் எது உண்மை என்றால் எனக்கு அவசரமான பணிகள் இருந்ததால் பிரதிவாதி அழைத்து வந்த நபரிடம் எப்படி கையெழுத்து கேட்பது என நான் கேட்கவில்லை. உண்மையில் பிரதிவாதி ஒரு நபரை அழைத்து வந்திருந்தால் அவரிடமும் நான் ஒரு சாட்சி கையொப்பம் பெற்றிருப்பேன் என்றும், அவ்வாறு எந்த கையெழுத்தும் பெறப்படவில்லை என்றும், நான்சொல்வதில் உண்மைகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள மேற்குறிப்பே போலியாக என்னால் தயாரிக்கப்பட்டது என்பதால்தான் உள்ளூரில் எந்த நபர்களும் மேற்படி மேற்குறிப்பில் சாட்சி கையெழுத்து இடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி மேற்குறிப்பில் போலியாக தாயரித்ததனால்தான் உள்ளூரில் எந்த நபர்களும் சாட்சி கையொப்பம் போட முன்வரைவில்லை என்பதால்தான் எனக்கு தெரிந்த குடும்ப நண்பர் ராஜ்குமார் மூலம் கையெழுத்தினை வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பதிலுரையில் கிரய ஒப்பந்த ஆவணத்தில் உள்ள மேற்குறிப்பில் கையெழுத்தே செய்யவில்லை

என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் 02.03.2020 தேதியிலேயே பதிலுரை போட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பதிலுரைக்கு பின்பு இன்றைய தேதிவரை பிரதிவாதியின் கையெழுத்து தான் மேற்குறிப்பில் உள்ளது என ஒப்பிட்டு பார்த்து கையெழுத்து நிபுணரிடம் கருத்து பெற நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்குறிப்பில் பிரதிவாதியின் கையெழுத்து போலியானது என கையெழுத்து நிபுணருக்கு அனுப்பினால் தெரிந்துவிடும் என்பதால்தான் நான் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் உள்ள மேற்குறிப்பானது இரண்டு நபர்கள் சாட்சி கையெழுத்து போடவில்லை என்பதாலும், மேற்குறிப்பினை எழுதியவர் யார் என்று எழுதப்படாததாலும் மேற்படி மேற்குறிப்பானது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்குறிப்பு செல்லதக்கதல்ல என்பதாலும், தாவாவானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதாலும், நான் தாவாவில் கோரியுள்ள ஏற்றதை ஆற்றுக பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கானது 11.06.2018 தேதிக்குள் நான் தாக்கல் செய்திருக்கவேண்டும் ஆனால் 04.09.2019 தேதியில் ஒரு வருடம் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள எனது வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. மேற்குறிப்பின் அடிப்படையில் நான் தொடர்ந்து தயாராகவும், விருப்பமாகவும் ஒப்பந்தத்தை நிறைவேற்ற இருந்தேன் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னால் எந்த ஒரு ஆவணமும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு 12.06.2015 முதல் 04.06.2019 வரை ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராகவும் விருப்பமாகவும் இருந்தேன் என்பதை காட்ட எனது தரப்பில் எந்த ஒரு ஆவணங்களும் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மேற்குறிப்பில் எத்தனை மாதம் கால நீட்டிப்பு போடப்பட்டுள்ளது என்றால் 5 மாத கால நீட்டிப்பு போடப்பட்டுள்ளது. மேற்படி 5 மாத கால நீட்டிப்பானது 17.09.2016 தேதியிலேயே முடிவடைகிறது என்றால் சரிதான். 17.09.2016 லிருந்து பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் வரை நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி பக்கத்தில்தான் இருக்கிறார். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த படி நான் ஒப்பந்தத்தை நிறைவேற்ற எப்போதுமே விருப்பமாகவும், தயாராகவும் இருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி அனுப்பியுள்ள அறிவிப்பிற்கு பதிலறிவிப்பு கொடுத்துள்ளேன். அது எனது தரப்பு சான்றாவணம்

வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி எனது பதிலறிவிப்பில் பிரதிவாதி ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 14.08.2019 தேதியில் வந்து பாக்கி கிரய தொகையை பெற்றுக்கொண்டு கிரயம் செய்து கொடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டேன் என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் பதிலறிவிப்பானது 06.08.2019 தேதியில் அனுப்பப்பட்டது. வா.சா.ஆ.3 அறிவிப்பை தவிர அதற்கு முன்பு பிரதிவாதியிடம் கிரய ஒப்பந்த படி கிரயம் செய்துகொடுக்க எழுத்து பூர்வமான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. 14.08.2019 தேதியில் நான் ஓமலூர் சார்பதிவளார் அலுவலகத்தில் இருந்தேனா என்றால் இருந்தேன். அதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் சாட்சி கையொப்பம் சார்பதிவாளர் அலுவலகத்தில் செய்தேன். நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கே வரவில்லை என்றும், நான் பொய்யாக வந்தேன் என சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் 14.08.2019 தேதியில் எழுதப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி கவிதா கணவர் பெயர் செந்தில்குமார். அவர் சந்தைபேட்டை, காடையாம்பட்டியில் குடியிருக்கிறார். 14.08.2019 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 பத்திரத்தில் பிரதிவாதி சாட்சி கையெழுத்து செய்ததிலிருந்தே அவர் ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் அன்றைய தினம் இருந்தார் என்றும், நான்தான் ஓமலூர் சார்பதிவளார் அலுவலகத்திற்கு நான் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி 14.08.2019 தேதியில் ஓமலூர் சார்பதிவளார் அலுவலகத்தில் இருந்தேன் என்பதை காட்ட எனது வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிரய ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.1 ன் படி எனது தரப்பில் நான் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு எப்போதும் தயாராகவும், விருப்பமாகவும் இருந்ததே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்குரையில் பலமுறை பிரதிவாதியை கேட்டுக்கொண்டும் அவர் கிரய ஒப்பந்த ஆவணத்தை நிறைவேற்றி கிரய ஆவணம் எழுதிகொடுக்க முன்வரவில்லை என்று சொல்வது தவறானது என்றால் சரியல்ல. 14.08.2019 தேதியில் என்னிடம் போதிய பணமும் வசதி வாய்ப்புகளும் கிரயம் செய்துகொள்வதற்கு இருந்தது என்பதை காட்ட ஆதரவுகள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிரய ஒப்பந்த பத்திரம் செல்லதக்கதல்ல என்றும்

அதன் அடிப்படையில் இந்த தாவாவில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்ககூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. ஆகவே இந்த தாவா பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடியாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**-இல்லை.

ஒப்பம்/-PW1
ஒப்பம்/-சார்பு நீதிபதி, ஓமலூர்.